# பார்வதி பாசுரம்



அமரர் ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையர்

## வாழ்வியல் பதிவும் தோத்திரங்களும்

31-10-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையர்

அவர்களின்

அமரத்துவப் பேறுகுறித்த

# வாழ்வியல் பதிவும் தோத்திரங்களும்

31-10-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

அன்பதன் வடிவாய் என்றும்
அகத்தினில் இன்பம் பொங்க
என்றுமே எம்மைப் பேணி
நின்றதோர் அன்புத் தாயே
துன்பமே வாழ்க்கை என்னும்
துயர்கடல் இதனில் நீந்தி
நன்றெமைக் காத்தே இன்றும்
நாதனாம் மாலை வேலன்
தன்னடி சேர்ந்த உங்கள்
தளிர்மலரப் பாதம் தன்னை
உன்னியே வணங்கி உற்ற
நினைவதே பொங்க நாளும்
மென்மையே பொங்கச் செய்த
மேன்மைசேர் நூலை உங்கள்
பொன்னடி மலரில் வைத்தே
சமர்ப்பணம் செய்தோம் அம்மா.



குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையர்

(சித்தியம்மா)

மண்ணகம்: 17-02-1926 விண்ணகம்: 21-10-2013

## திதி வெண்பா

நல்ல விஜய வருட ஐப்பசியில்
மெல்ல மதியது குன்று திருதியைசேர
பார்வதி யம்மா பரவுலகை விட்டு
ஆர்வமாய் அரனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேகழி யா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

இப்பக்கத்தின் சிந்தனை...... பூட்டன் - தேவ. திவ்யஷரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையர்
# அவர்களின்
# வாழ்வியல் பதிவுகள்

உலகத்திலே பிறக்கின்ற மனிதர்கள் எல்லோரும் ஒரு நியதியான கர்ம வினைக்குள் அகப்பட்டே வாழ்வியலை தொடர்கின்றனர். இதிலே பலவிதமான நன்மைகளும் உண்டு. கஷ்டங்களும் உண்டு. வாழ்க்கையை எதிர்கொள்ளத் தெரியாதவர்கள் ''வீழ்ச்சி'' எனும் நிலையத்தான் தொடமுடியும். தன்னம்பிக்கை இல்லாதவனும், வாழ்வில் தான் நினைப்பது கிடைக்கவில்லை என்கின்ற எண்ணத்தில் மற்றவர்களுக்கு பாரமாய் மற்றவர் மனதை புண்படுத்தி வாழும் நிலையில் உள்ளவர்கள் இந்த புவி வாழ்விற்கு அருகதை அற்றவர்கள். இவர்களில் இருந்துதான் கோழைகள் உருவாகின்றனர். ஆனால் வாழ்க்கையில் எதையும் மிகத் துணிவோடு எதிர்கொண்டு தோல்விகளை வெற்றிப்படிகளாக்கி முயற்சியை மூலதனமாகக் கொள்கின்றவர்கள். மற்றையவர்களுக்கு முன்னோடியாகி சாதனை யாளர்கள் என்கின்ற பெருமை பெறுகின்றவர்கள். இவர்களின் வாழ்வு என்றுமே கருவூலமாக எழுச்சிபெறும். அப்பேற்பட்ட ஒரு கருவூல வாழ்வியலை கொண்டவர் ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையர் அவர்கள்.

பாரத தேசம் எனப்படும் இந்தியாவின் தென்னகமான தமிழ் நாட்டில் அக்காலங்களில் அறிவுத் திறனும் ஆற்றலும் அதிகம் கொண்ட பிராமண சமூகம். ஏழ்மையிலும் முதன்மை இடமாய் இருந்ததே மெய்யான விடயம். தங்களின் குடும்ப சுமையை மிகவும் சிரமத்தின் மத்தியிலே இயங்கச் செய்ய இவர்கள் மிகவும் பிரயத்தனம் கொள்வார்கள். அப்படி வாழ்ந்த பல குடும்பங்களில் ஒன்று பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண ஐயர் ஸ்ரீமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரியம்மா குடும்பம். இந்த தம்பதிகளின் புதல்வியாக ஸ்ரீமதி பார்வதியம்மா 17-02-1926அன்று ஜெகம் ஆளும் மகம் நட்சத்திரத்தில் பிறந்தார். இந்தியாவில் அக்காலங்களில் பெண்பிள்ளை என்றாலே வேதனைப்படுவார்கள்.

தமது ஏழ்மை வாழ்வியலில் இவர்களை எப்படிக் கரை சேர்ப்பது என்று. இதனாலேயே பெண் பருவம் அடைந்ததும் 14 வயது 16 வயது என மிகச் சிறிய வயதில் திருமணம் செய்து கொடுத்துவிடுவார்கள். திருமண வாழ்வு பற்றிய எவ்விதமான அறிவும் இல்லாமல் அக்கால பிராமண சமூகப் பெண்கள் சிறுவயதில் திருமணத்தை முடித்து மிகவும் சிரமப்படுவது கண்கூடு. அப்படியான ஒரு நிலையில் இவரின் திருமணமும் நடைபெற்றுவிட்டது.

வடதுன்னை அருணாசலக்குருக்கள் பொன்னம்மா தம்பதிகளின் புதல்வன் பஞ்சாட்சரக் குருக்கள் இவரைக் கரம்பற்றி இந்தியாவில் இருந்து அழைத்து வந்தார். சந்தோஷமாக தன்நாட்டில் இருந்த பார்வதியம்மா வாழ்வியற் போராட்டம் என்ன என்பது தெரியாமல் இலங்கைத் திருநாட்டிற்கு வருகை தந்தார். பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயிலினிலே குருவாக பணியாற்றிய பஞ்சாட்சரகுரு பார்வதியம்மாவை மிகவும் சந்தோஷமாக வைத்திருந்தார்.

இவர்களுக்கு அருணாசல ஐயர் எனும் ஆண்மகனும் பிறந்தார். காலத்தின் கோலம் விதியை யார்தான் வெல்லமுடியும். மனித வாழ்வின் சில சூட்சுமங்கள் இறைவன் கையிலேதான் இருக்கின்றது. ஆம் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் புவிவாழ்வை நீக்கி தேக வியோகமானார். கையிலே பிள்ளையுடன் தனிமரமாகி நிர்க்கதியாக நின்றார் பார்வதியம்மா. கல்மனம் கொண்டோரும் இவரைக் கண்டு கண்ணீர் சிந்தும் நிலையே இவருக்கு அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழி மூடினால் மறுவழி திறக்க இறைவன் அருளுவான். அந்த வகையில் துன்னாலை வடக்கு ஆயில் நின்றெல்லை வல்லியானந்தப் பிள்ளையார் கோயில் அர்ச்சகராக தனிமரமாய் இருந்த கணேசக் குருக்கள் சின்னம்மா தம்பதிகளின் புதல்வன் பிரம்மஸ்ரீ முத்தையர் என்பவருக்கு ஊரும், உறவினரும் கூடி பார்வதியம்மாவை மறுமணம் செய்து வைத்தனர். தன் வாழ்வுநிலை இதுதான் என்பதில் உறுதியாக இருந்து முத்தைய ரோடு இல்லறத்திலே இணைந்தார். அதன் பயனாய் இராஜேஸ்வரி, றாதாகிருஷ்ணஐயர், மீனாம்பாள் எனும் மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

மீண்டும் பார்வதியம்மை வாழ்வில் விதி தனது விளை யாட்டை தொடங்கியது. மூன்றாவது மகள் பிறந்து 11ம் நாளில் முத்தையர் அமரரானார். நான்கு பிள்ளைகளுடன் கைம்பெண் ணாக வாழ்வியலை என்ன நிலையில் இவரால் கொண்டு செல்லமுடியும்? மற்றவர்களின் ஒட்டு மொத்த பரிதாபம்தான் இவருக்கு இருந்ததே தவிர உதவிகள் இல்லை. பிள்ளைகளின் படிப்பு, சாப்பாடு, உடுதுணி என எல்லா வகையிலும் ஒரு கைம் பெண்ணாக இருந்து தனது வைராக்கியத்தை இழக்காமல் வாழ்க்கையோடு முட்டி மோதினார்.

கைகொடுக்கும் தெய்வமாய் தென் புலோலி முறாவில் பிள்ளையார் கோயில் இவரின் மகனை பூசை செய்யக் கேட்டனர். 11வயதிலே மூத்தமகன் அருணாசல ஐயர். முறாவில் பிள்ளையார் பூஜைகளை பொறுப்பு ஏற்றுச் செய்வதோடு தனது கல்வியையும் விடாமல் தொடர்ந்தார். ராதாகிருஷ்ண ஐயரும் கல்வியிலே நல்ல மேன்மை பெற்றுப் பொறுப்புடன் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தமகன் அருணாசல ஐயர் புலோலி சின்னத்தாய் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வேதக்குட்டிக்குருக்கள் அவர்களின் புதல்வி ராஜலட்சுமியை விரும்பி திருமணம் செய்தார். அதேபோல தனது தங்கை ராஜேஸ்வரியை வேதக்குட்டி குருக்களின் மூத்த புதல்வர் பாலசுப்பிரமணியக் குருவிற்கு திருமணம் செய்வித்து கொடுத்தார். றாதாகிருஷ்ண ஐயர் துன்னாலை சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்களின் ஏக புதல்வி அமிர்தேஸ்வரியை திருமணம் செய்து கொண்டார். கடைசி மகள் மீனாம்பாள் துன்னாலை கோயிற்கடவை ஆதீனம் சிவஸ்ரீ ஆறுமுக ஐயர் மகன் கணேசக்குருக்கள் அவர்களை கரம் பற்றினார்.

மூத்தமகன் அருணாசல ஐயர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உதவி நிதி முகாமையாளராகவும் இளையமகன் றாதாகிருஷ்ண ஐயர் வருமானவரி அதிகாரியாகவும் உத்தியோக சிறப்புப்பெற்று பார்வதி அம்மையின் இளமைக்கால கஷ்டத்தை மறக்கச் செய்தனர்.

இப்படியாக அமரர் ஸ்ரீமதி பார்வதியம்மா தனது சுமைகளை படிப்படியாக இறக்கி வைத்தார். இவரின் வாழ்வியலுக்கு அர்த்த புஷ்டியாக நிறைவான பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எல் லோரையும் மனம் குளிரக் கண்டார். மூத்தமகன் அருணாசல ஐயரோடு திருகோணமலைப் பகுதியில் சிறிது காலம் இருந்தார். துன்னாலையில் தனது பெண் பிள்ளைகள் இருவருடனும் கலந்து பேசி மகிழ்வோடு வாழ்ந்தார்.

நாட்டின் போர்ச்சூழல் கொழும்பிலே கடைசி கால வாழ்க்கை அமைந்துவிட்டது. வாழ்வின் பெரும் பகுதி தனது மூத்தமகள் ராஜேஸ்வரியோடு இருந்து கொண்டார். கொழும்பிலே தனது தாய்க்கு தொடர்மாடி மனையில் பம்பலப்பிட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவாங்கி தனது தாய் சௌகரியமாக இருக்க றாதாகிருஷ்ண ஐயர் வழிவகுத்தார். தனது தாயை சேய் போல மிகவும் சிறப்பாகவே பராமரித்து தாய்க்கு சிறந்த பணிவிடை மேற்கொண்டார் மகள் ராஜேஸ்வரி.

மூத்த மகன் அருணாசல ஐயர் 2007ம் ஆண்டு அமரரானார். வாழ்க்கையில் சஞ்சலம், சகிப்புத்தன்மை, அவதூய, ஏக்கம், தியாகம் என்கின்ற அனைத்து துன்பியல்களோடும் அதிகம் போராடிய பார்வதியம்மா தனது மகனின் மரணத்தையும் தாங்கும் சக்தியைப் பெற்றுக் கொண்டார். வல்லியானந்தப் பிள்ளையார், முறாவில் பிள்ளையார் என இரு ஆலயங்களின் மீதும் அதிகம் பற்றும், பக்தியும் கொண்டவர். இறுதிக் காலங்களில் அவரின் பேசும் தன்மை குறைந்துவிட்டது.

2013 விஜய வருடப்பிறப்பின் முதன்நாள் தனது கடைசி மகள் மீனாம்பாளின் மரணமும் ஆன்ம ரீதியாக அவரை உலுப்பிக் கொண்டது. அடிமேல் அடிவிழுந்து அந்த ஆன்மா அத்தனை துயரங்களையும் தாங்கிக் கொண்டது. வாழ்க்கை என்கின்ற சக்கரத்தை தொடராக போராடி ஜெயித்த ஒரு பெண் என்கின்ற வகையிலே அனைவரும் இவரின் வாழ்வியலை விழி உயர்த்திப் பார்க்கும் நிலை உண்டு. அன்பு, அல்லல், ஆச்சரியம் என முப்பரிமாணம் பெற்ற பார்வதியம்மா 21-10-2013 ஐப்பசித் திங்கள் அபர திருதியை திதியில் அனைவரும் உறங்கும் அர்த்த ஜாம நேரத்தில் அவரின் ஆன்மா அரண் அடிமலர்தனை அரவணைத்துக் கொண்டது.

"பார்வதியம்மா எனும் பரிபூரண பெண்ணின் வாழ்வியலிது"

ஓம் சாந்தி..... சாந்தி....... சாந்தி........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருமுறைத் தோத்திரப் பாக்கள்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தாள் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னைஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக!
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தாய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேரமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர
எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரும்அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரிமத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தர்க்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷித்தொடு ரக்ஷித்தருள்வதும்ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகோடு கழுகாடத்
திக்குப்பயி ரட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குதகி ரிகிட எனவோத
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொப் புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## அபிராமித் ஸ்துதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயில் கொள் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்கமணிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறாவில் பிள்ளையார் வேண்டல்

அறம்செய் தெம்மன்னை அன்பாய் வளர்த்தே
திறம்செய் கல்விதந்தே திறனாய் யோம்பித்து
புறம்மென புவிவிட்டேகிய பார்வதி யம்மையை
முறாவில் பிள்ளையாரே நின்பாதம் சேர்த்திடுக.

## வல்லியானந்த பிள்ளையார் வேண்டல்

தாயில் சிறந்த தெய்வமாய் எமக்கமைந்து
கோயில் என்றால் நினையே தினம்வணங்கி
பாயில் வாழ்வினை பார்வதி யம்மைமுடித்தார்
ஆயில் நின்றெல்லை விநாயக ஏற்றிடுநின்பாதம்.

## மிந்திரன் அம்மன் வேண்டல்

பந்தபாச பண்பியல் பலவும் கொண்ட
சந்திர வதனமான வடிவுடை யெம்தாய்
மந்திரமா தினம்முனை நிறைந்த பார்வதியை
மிந்திரன் அம்மனே ஏற்றிடுக நின்பாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமிப் பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

### (நல்வித்தையும், ஞானமும் பெற)

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மின்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 1

### (உயர் பதவிகள் அடைய)

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னிக்
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. 2

### (மலையென வருந்துன்பம் பனியென நீங்க)

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே! 3

### (மரணத்தை வெல்ல)

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல் வரும்போது வெளிநிற்கவே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (வீடு, நிலம் முதலிய செல்வங்கள் உண்டாக)

உறைகின்ற நின்றிருக்கோயிலின் கேள்வரொருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்சமோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே? 5

### (தீராத வியாதிகள் தீர)

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 6

### (நினைத்த காரியம் இடையுறின்றி ஈடேற)

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே. 7

### (மனநோய் தீர)

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அகால மரணமும், துர்மரணமும் ஏற்படாதிருக்க)

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 9

## (பயிர் வளர, செல்வம் செழிக்க)

வந்தே சரணம் புகும் அடியார்க்கு வானுலகம்
தந்தே பரிவோடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்க்கதிர் ஞாயிறும் திங்களுமே. 10

## (தீமை பகையெல்லாம் ஒழிய)

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திரிபுரசுந்தரி சிந்தூர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 11

## (கல்வி சிறக்க)

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 12

## (பகைவர்கள் அழிய)

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்ட பலிக்குஉழலா நிற்பர் பாரெங்குமே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (நிலம், வீடு, தோட்டம் போல செல்வங்கள் பெருக)

பாரும் புனலும் கணலும் வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம்இல்லையே. 14

### (ஸகல ஸௌபாக்கியங்களும் உண்டாக)

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 15

### (மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பெருக)

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே. 16

### (தொழுதலில் தலைமை எய்த)

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 17

### (வலிமை மிக்க விதியையும் வெல்ல)

தங்குவர் கற்பகத் தாருவின் நிழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திரு மேனி குறித்தவரே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பகைவர்களால் உண்டாகும் அச்சம் நீங்க)

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 19

(நிலையான மனம் மகிழ்ச்சி உண்டாக)

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே. 20

(அம்பிகையின் அருள் எப்போதும் கிடைக்க)

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே. 21

(அரசாங்க காரியங்களில் வெற்றி உண்டாக)

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. 22

(புகழும் தர்மமும் வளர)

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதிப் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருகடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 23

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதராவ தம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்!
அநாயகைக நாயகம் விநாசி'தேப தைத்யகம்
நதாசு'பாசு'நாச'கம் நமாமி தம் விநாயகம்!! 1

நதேதராதி பீகரம் நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத் ஸீராரி நிர்ஜ்ஜரம் நதாதிகாப துத்தரம்!
ஸுரேச்'ரம் நிதீச்வரம் கஜேச்'வரம் கணேச்'வரம்
மஹேச்'வரம் தமாச்'ரயே பராத்பரம் நிரந்தரம்!!
2

ஸமஸ்த லோகச'ங்கரம் நிரஸ்ததைத்ய குஞ்ஜரம்
தரேதரோர்தரம் வரம் வரேபவக்த்ர மக்ஷரம்!
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யச'ஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்!! 3

அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம்!
ப்ரபஞ்ச நாச'பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோலதான வாரணம் பஜே புராண வாரணம்!! 4

நிதாந்த காந்த தந்தகாந்தி மந்தகாந்த காத்மஜம்
அசிந்த்யரூப மந்த ஹீன மந்தராய க்ருந்தனம்!
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகிநாம்
தமேகதந்த மேவ தம் விசிந்தயாமி ஸந்ததம்!! 5

மஹா கணேச பஞ்சரத்ன மாதரேணயோ(அ)ன்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன்கணேச்'வரம்!
அரோகதா மதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸீபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்ட பூதி மப்யுபைதி ஸோ(அ)சிராத்!! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பஞ்சரத்னம்

ஷடானனம் சந்தனலிப்த காத்ரம்
மஹோரஸம் திவ்ய மயூர வாஹனம்!
ருத்ரஸ்ய ஸூனும் ஸுரலோக நாதம்
ப்ரஹ்மண்ய தேவம் ச'ரணம் ப்ரபத்யே!! 1

ஜாஜ்வல்யமானம் ஸுரப்ருந்த வந்த்யம்
குமாரதாரா தட மந்திரஸ்தம்!
கந்தர்ப்ப ரூபம் கமனீய காத்ரம்
ப்ரஹ்மண்ய தேவம் ச'ரணம் ப்ரபத்யே!! 2

த்விஷட் புஜம் த்வாதச' திவ்ய நேத்ரம்
த்ரயீதனும் சூ'லமஸிம் ததானம்!
சே'ஷாவதாரம் கமனீய ரூபம்
ப்ரஹ்மண்ய தேவம் ச'ரணம் ப்ரபத்யே!! 3

ஸுராரி கோராஹவ சோ'பமானம்
ஸுரோத்தமம் ச'க்திதரம் குமாரம்!
ஸுதார ச'க்த்யாயுத சோ'பிஹஸ்தம்
ப்ரஹ்மண்ய தேவம் ச'ரணம் ப்ரபத்யே!! 4

இஷ்டார்த்த ஸித்தி பிரதமீச' புத்ரம்
இஷ்டான்னதம் பூஸுர காமதேனும்!
கங்கோத்பவம் ஸர்வ ஜனானு கூலம்
ப்ரஹ்மண்ய தேவம் ச'ரணம் ப்ரபத்யே!! 5

ய: ச்'லோக பஞ்சகமிதம் படதே ச பக்த்யா
ப்ரஹ்மண்ய தேவ விநிவேசி'த மாநஸஸ்ஸன்!
ப்ராப்னோதி போக மகிலம் புவியத்யதிஷ்டம்
அந்தே ஸ கச்சதி முதா குஹஸாம்ய மேவ!! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஷ்டகம்




ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாச'க லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹனம் கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாச'ன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபி'த லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாச'ன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோ'பித லிங்கம்
ஸஞ்சித பாப விநா'சன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாச'ன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசி'வ லிங்கம்

லிங்காஷ்டம் இதம்புண்யம் ய: படேத் சி'வ ஸந்நிதௌ
சி'வலோக மவாப்னோதி சி'வேன ஸஹ மோத தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பார்வதீ வல்லபாஷ்டகம்

நமோ பூதநாதம் நமோ தேவதேவம்
நம: காலகாலம் நமோ திவ்ய தேஜம்!
நம: காம பஸ்மம் நமச்சாந்த சீலம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 1

ஸதாதீர்த்த ஸித்தம் ஸதாபக்தாக்ஷம்
ஸதாசைவ பூஜ்யம் ஸதாசுப்ர பஸ்பம்!
ஸதாத்யான யுக்தம் ஸதாஜ்ஞான தல்பம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 2

ச்'மசானம்பயானம் மஹாஸ்த்தானவாஸம்
ச'ரீரம் கஜானாம் ஸதாசர்ம வேஷ்டம்!
பிசா'சம் நிசேசம் பசூ'னாம்ப்ரதிஷ்ட்டம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 3

பணீநாக கண்ட்டே புஜங்காத்ட நேகம்
கலேருண்டமாலம் மஹாவீர சூ'ரம்!
கடிவ்யாக்கிரசர்மம் சிதாபஸ்மலேபம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்சுத்த சங்கா சிவா சாமபாகம்
வியத் தீர்க்க கேசம் ஸதா மாம்த்ரிணேத்ரம்!
பணீநாக கர்ணம் ஸதா பாலசந்த்ரம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 5

கரே சூலதாரம் மஹாகஷ்ட நாச'ம்
ஸுரேசம் வரேசம் மஹேசம் ஜனேச'ம்!
தனே சாரு ஈசம் த்வஜேசம் கிரீச'ம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 6

உதாஸம் ஸுதாஸம் ஸுகைலாஸ வாஸம்
தராநிர்ததரம் ஸம்ஸ்த்தி தம் ஹ்யாதிதேவம்!
அஜாஹேமகல்ப த்ருமம் கல்ப ஸேவ்யம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 7

முனீ னாம்வரேண்யம் குணம் ரூபவர்ணம்
த்விஜாஸம்படஸ்தம் சி'வம் வேதசாஸ்த்ரம்!
அஹோ தீனவத்ஸம் க்ருபாலும் சிவம் ஹி
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 8

ஸதாபாலநாதம் ஸதா ஸேவ்யமானம்
ஸதா பக்திதேவம் ஸதா பூஜ்யமானம்!
மயாதீர்த்தவாஸம் ஸதாஸேவ்யமேகம்
பஜே பார்வதீ வல்லபம் நீலகண்டம்!! 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ மஹிஷாஸீரமர்த்தினீ ஸ்தோத்ரம்

அயி கிரிநந்தினி நந்திதமேதினி
விச்'வவினோதினி நந்தநுதே
கிரிவரவிந்த்யசி'ரோ(அ)தி நிவாஸினி
விஷ்ணுவிலாஸினி ஜிஷ்ணுநுதே!
பகவதி ஹே சி'திகண்டகுடும்பினி
பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!! 1

ஸுரவரவர்ஷிணி துர்த்தரதர்ஷிணி
துர்முகமர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவனபோஷிணி ச'ங்கரதோஷிணி
கில்பிஷமோஷிணி கோஷரதே!
தனுஜநிரோஷிணி திதிஸுதரோஷிணி
துர்மதசோ'ஷிணி ஸிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!! 2

அயி ஜகதம்ப! மதம்ப! கதம்ப-
வனப்ரிய வாஸினி! ஹாஸரதே!
சி'கரிசி' ரோமணி துங்க ஹிமாலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்’ருங்க நிஜாலய மத்யகதே!
மது மதுரே! மதுகைடபபஞ்ஜினி
கைபடபஞ்ஜனி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 3

அயி ச’தகண்ட விகண்டித ருண்ட
விதுண்டிதசு’ண்டகஜாதிபதே
ரிபுகஜகண்ட விதாரணசண்ட
பராக்ரமசு’ண்டம்ருகாதிபதே!
நிஜபுஜதண்ட நிபாதிதகண்ட
விபாதிதமுண்ட படாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 4

அயி ரணதுர்மத ச’த்ருவேவாதித
துர்த்தரநிர்ஜ்ஜர ச’க்திப்ருதே
சதுரவிசார துரீணமஹாசி’வ
தூக்ருத ப்ரமதாதிபதே!
துரிததுரீஹ துராச’யதுர்மதி
தானவதூத க்ருதாந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 5

அயி ச’ரணாகதவைரிவதூவர
வீரவராபயதாயகரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்ரிபுவன மஸ்தக சூ'லவிரோதி
சி'ரோதிக்ருதாமல சூ'லகரே!
துமி துமிதாமர துந்துபிநாத மஹா
முகரீக்ருத திக்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!! 6

அயிநிஜஹுங்க்ருதிமாத்ர நிராக்ருத
தூம்ரவிலோசன துஸம்ரச'தே
ஸமர விசோ'ஷித சோ'ணிதபீஜ
ஸமுத்பவசோ'ணித பீஜலதே!
சி'வசி'வ சு'ம்ப நிசு'ம்பமஹாஹவ
தர்ப்பித பூத பிசா'சரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!! 7

தனுரனுஷங்க ரணஷணஸங்க
பரிஸ்புரதங்க நடத்கடகே
கனக பிச'ங்கப்ருஷத்க நிஷங்க
ரஸத்படச்'ருங்க ஹதாவடுகே!
க்ருதசதுரங்க பலஷிதிரங்க கடத்
பஹீரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!!
8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜய ஜய ஜப்யஜயே ஜய ச’ப்த
பரஸ்துதி தத்பர விச்’வநுதே
பண பண பஞ்ஜிமி பிங்க்ருதநூபுர
ஸிஞ்ஜிதமோஹஜத பூதபதே!
நடிதநாட்ய ஸுகானரதே
நாடிதநாட்ய ஸுகானரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 9

அயிஸுமன: ஸுமன: ஸுமன:
ஸுமன: ஸுமனோஹர காந்தியுதே
ச்’ரிதரஜநீ ரஜநீ ரஜநீ ரஜநீ
ரஜநுகர வக்த்ரவ்ருதே!
ஸுநயன விப்ரமரப்ரமரப்ரமர
ப்ரமர ப்ரமராதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 10

ஸஹிதமஹாஹவ மல்லமதல்லிக
மல்லிதரல்லக மல்லரதே
விரசிதவல்லிக பல்லிகமல்லிக பில்லிக
பில்லிக வர்க்கவ்ருதே!
ஸிதக்ருதபுல்லஸமுல்லஸிதாருண
தல்லஜ பல்லவ ஸல்லலிதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிரலகண்ட கலந்மதமேதுர
மத்தமதங்கஜ ராஜபதே
த்ரிபுவனபூஷண பூதகலாநிதி
ரூபபயோநிதி ராஜஸு"தே!
அயி ஸு"ததீஜன லாலஸ மானஸ
மோஹனமன்மத ராஜஸு"தே
ஜய ஜய ஹே மஹிஷாஸு"ரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸு"தே!! 12

கமலதலாமல கோமலகாந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலிசலத்கல ஹம்ஸகுலே!
அலிகுல ஸங்குல குவலய மண்டல
மௌலி மிலத் பகுளாளிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸு"ரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸு"தே!! 13

கரமுரளீரவ வீஜிதகூஜித
லஜ்ஜித கோகில மஞ்ஜீமதே
மிலிதபுலிந்த மனோஹரகுஞ்சித
ரஞ்சிதசை'ல நிகுஞ்ஜகதே!
நிஜகுணபூத மஹாச'பரீகண
ஸத்குணஸம்ப்ருத கேலிதலே
ஜய ஜய ஹே மஹிஷாஸு"ரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸு"தே!! 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதடபீததுகூலவிசித்ர
மயூக திரஸ்க்ருத சந்த்ரருசே
ப்ரணத ஸுராஸுர மௌலிமணி ஸ்ப்புர
தம்சு’ல ஸந்நக சந்த்ர ருசே!
ஜித கனகாசல மௌலிபதோர்ஜித
நிர்ப்பரகுஞ்ஜர கும்பகுசே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 15

விஜித ஸஹஸ்ரகரைக ஸஹஸ்ரகரைக
ஸஹஸ்ரகரைநுதே
க்ரதஸீரதாரக ஸங்கரதாரக
ஸங்கரதாரக ஸுநுஸுதே!
ஸீரத ஸமாதி ஸமான ஸமாதி
ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 16

பதகமலம் கருணாநிலயே வரிவஸ்யதி
யோ அ)னுதினம் ஸசி’வே
அயி கமலே கமலநிலயே கமலா
நிலய:ஸ கதம் ந பவேத்!
தவ பதமேவ பரம்பதமித்யனு
சீ’லயதோ மம கிம் ந சி’வே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை’லஸுதே!! 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகலஸத்கல ஸிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸ கிம் ந ச'சீகுசகும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம்!
தவ சரணம் ச்ரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சி'வம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி
ரம்யகபர்த்தினி சை'லஸுதே!! 18

தவ விமலேந்துகுலம் வதனேந்து மலம்
ஸகலம் நனு கூலயதே
கிமு புருஹூத புரந்துமுகீ
ஸுமுகீபி ரஸௌ விமுகீக்ரியதே
மமது மதம் சிவநா மதனே
பவதீ க்ருபயா கிமுத க்ரியதே
ஜய ஜய ஹே மகிஷாஸுரமர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே!! 19

அயி மயி தீன தயாளுதயா கிருபயைவ
த்வயா பவிதவ்யமுமே
அயிஜகதோ ஜநநீ க்ருபயாஸி
யதாஸி ததா(அ)னு பிதாஸிரதே
யது சித மந்ர பவத்யுரரீகுரு
தாதுரு தாப மபாகுருதே
ஜய ஜய ஹே மகிஷாஸுரமர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே!! 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம்

அங்கம் ஹரே: புலகபூஷண மாச்'மரயந்தீ
ப்ருங்காங்கநேவ முகுளாபரணம் தமாலம்!
அங்கீக்ருதாகில விபூதி ரபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கள் தேவதாயா:!! 1

முக்தா முஹுர்விதததீ வதநே முராரே:
ப்ரேம த்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி!
மாதா த்ருசோ'ர் மதுகரீவ மஹோத்பலேயா
ஸா மே ச்'ரியம் திச'து ஸாகரஸம்பவாயா:!! 2

ஆமீலிதாக்ஷமதிகம்ய முதா முகுந்தம்
ஆனந்தகந்த மநிமேஷ மநங்க தந்த்ரம்!
ஆகேகரஸ்த்தித கநீகிநபக்ஷ்ம நேத்ரம்
பூத்யை பவேத் மம புஜங்க ச'யாங்கநாயா:!! 3

பாஹ்வந்தரே மதுஜித: ச்'ரிதகௌஸ்துபே யா
ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி!
காமப்ரதா பகவதோ(அ)பி கடாக்ஷமாலா
ல்யாணமாவஹது மே கமலாலயாயா:!! 4

காலாம்புதாளி லலிதோரஸிகைடபாரே:
தாத்ரே ஸ்ப்புரதி யா தடிதங்கநேவ!
மாது: ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி
பத்ராணி மே திச'து பார்க்கவ நந்தநாயா:!! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதிநி மன்மதனே!
மய்யாபதேத் ததிஹ மந்தர மீக்ஷணார்த்தம்
மந்தாஸனம் ச மகராலய கன்யகாயா:!! 6

விச்'வாமரேந்த்ர பத விப்ரம தான தக்ஷம்
ஆநந்தஹேது ரதிகம் முரவித்விஷோ(அ)பி!
ஈஷன் நிஷீதது மயி க்ஷண மீக்ஷணார்த்தம்
இந்தீவரோதர ஸஹோதர மிந்திராயா:!! 7

இஷ்டாவிசி'ஷ்டமதயோபி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப பதம் ஸீலபம் லபந்தே!
த்ருஷ்டி: ப்ருஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ் மம புஷ்கர விஷ்டராயா:!! 8

தத்யாத் தயானுபவனோ த்ரவிணாம்பு தாராம்
அஸ்மின்நகிஞ்சன விஹங்கசி'சௌவிஷண்ணே!
துஷ்கர்மகர்ம மபநீய சிராய தூரம்
நாராயண ப்ரணயினீ நயனாம்புவாஹ:!! 9

கீர்த்தேவதேதி கருடத்வஜ சுந்தரீ தி
சா'கம்பரீ தி ச'சி'சேகர வல்லபேதி!
ஸ்ருஷ்டிஸ்த்திதி ப்ரளயகேளிஷீ ஸம்ஸ்த்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவநைக குரோஸ்தருண்யை!! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்'ருத்யை நமோ(அ)ஸ்து சு'பகர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமா(அ)ஸ்து சு'பகர்மபலப்ரதாயை!
ச'க்த்யை நமோ(அ)ஸ்து சதபத்ரநிகேதநாயை
புஷ்ட்யை நமோ(அ)ஸ்து புரஷோத்தம வல்லபாயை!! 11

நமோ(அ)ஸ்து நாளீக நிபாநநாயை
நமோ(அ)ஸ்து துக்தோததி ஜன்மபூம்யை!
நமோ(அ)ஜ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோ(அ)ஸ்து நாராயண வல்லபாயை!! 12

நமோ(அ)ஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோ(அ)ஸ்து பூமண்டலநாயிகாயை!
நமோ(அ)ஸ்து தெவாதிதயாபராயை
நமோ(அ)ஸ்து சா'ர்ங்காயுத வல்லபாயை!! 13

நமோ(அ)ஸ்து தேவ்யை ப்ருகுநந்தநாயை
நமோ(அ)ஸ்து விஷ்ணோருரஸி ஸ்த்திதாயை!
நமோ(அ)ஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோ(அ)ஸ்து தாமோதர வல்லபாயை!! 14

நமோ(அ)ஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோ(அ)ஸ்து பூத்யை புவனப்ரஸூத்யை!
நமோ(அ)ஸ்து தேவாதிபிரர்ச்சிதாயை
நமோ(அ)ஸ்து நந்தாத்மஜ வல்லபாயை!! 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநானி
ஸாம்ராஜ்யதாத விபவாநி ஸரோருஹாக்ஷி!
த்வத்வந்தநாதி துரிதா ஹரணோத்யதானி
மாமேவ மாதரநிச'ம் கலயந்து மான்யே!! 16

யத்கடாக்ஷ ஸமுபாஸநாவிதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத:!
ஸந்தனோதி வசனாங்க மானஸை:
த்வாம் முராரி ஹ்ருதயேச'வரீம் பஜே!! 17

ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே
தவல தமாம்ஸீக கந்தமால்யசோ'பே!
பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே
த்ரிபுவனபூதிகரி ப்ரஸீத மஹ்யம்!! 18


திக்கஸ்திபி: கனககும்ப முகாவஸ்ருஷ்ட
ஸ்வர்வாஹி விமலாசாருஜலப்லுதாங்கீம்!
ப்ரதர்நமாமி ஜகதாம் ஜனனீ மசே'ஷ
லோகாதிநாத க்ருஹிணீ மம்ருதாப்தி புத்ரீம்!! 19

கமலே கமலாக்ஷவல்லபே த்வம்
கருணாபூர தரங்கிதை ரபாங்கை:!
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம் தயாயா:!! 20

ஸ்துவந்தி யே ஸ்துதிபி ரமீபி ரன்வஹம்
த்ரயீமயீம் த்ரிபுவனமாதரம் ரமாம்!
குணாதிகா குருதர பாக்யபாகின:
பவந்தி தே புவி புதபாவிதாச'யா:!! 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் நன்றி

எங்கள் குடும்பத்தின் மூத்த உறுப்பினராய்

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாக இருந்து

எம்மை உயர்நிலை வாழ்விற்கு

இட்டுச் சென்ற

***அமரர்***

***ஸ்ரீமதி பார்வதியம்மா முத்தையரின்***

மரணச் சடங்கில் பலவகையிலும் உதவிகள் புரிந்து


துயரினிலே பங்காற்றிய அனைத்து

உள்ளங்களுக்கும்

நன்றிகளை

காணிக்கையாக்குகின்றோம்.

நன்றி.




இவ்வண்ணம்

**மக்கள், மருமக்கள்,**

**பேரப்பிள்ளைகள்,**

**பூட்டப்பிள்ளைகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி தெ

காசிப கோத்திரம்
அருணாச்சல குருக்கள்
+
பொன்னம்மா

**பஞ்சாட்சர குருக்கள்**

**தென்இந்தியா பாரத்துவ**
**இராமகிருஷ்**

**பார்வதி**

அருணாசல ஐயர் (அமரர்)
+
ராஜலட்சுமி

சிவராஜசர்மா (மோகன்)

தவராஜசர்மா (பாஸ்கரி)
+
லட்சுமி
- ஹரிகிருஷ்ணன்
- ஹரிகரன்

தேவராஜசர்மா (ஐயா)
+
கார்த்திகா
- நமிஸ்
- ஹரிகேஸ்

சற்குணன் (அமரர்)

மாலா
+
ஸ்ரீதரன்
- கோகுல்
- ராகுல்

ராஜேஸ்வரி
+
பாலசுப்பிரமணிய

சங்கவி

பிரதீபசர்மா
+
ஜெகதீஸ்வரி
- மயூரி
- சாருஜன்

ராமமூர்த்திசர்மா


மகேந்திரசர்மா
+
அபிராமி
- விசாலி

சுஜாதா
+
தேவலோகேஸ்வரக்குருக்கள்
- ஹரிசுதன்
- திவ்யஷரன்

வான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ழி தொடர் உறவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Printed by: Anush Printers, Col-13. Tel: 0777 244893
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org